©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 1]

சென்னை, புதன்கிழமை, ஜனவரி 7, 2009
மார்கழி 23, திருவள்ளுவர் ஆண்டு–2039

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

#### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

#### அறிவிக்கை

*[அரசாணை (2டி) எண் 41, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J-1)த் துறை, நாள்: 12 ஆகஸ்ட் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (*b*) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (*b*) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை–600 006இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

#### வரைவு அறிவிக்கை

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (*b*) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 30–6–2004ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2இல் 296ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா./488/2004ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், பட்டு முறுக்கேற்றும் தொழிலில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணிகளுக்கு/பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:—

**விவர அட்டவணை**

**பட்டு முறுக்கேற்றும் தொழிலில் வேலை**

| *தொடர் எண்* | *பணி/பணியாளர்களின் வகைகள்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூபாய் காசு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | நூல் இழைத்தல் | நாளொன்றுக்கு 97.00 |
| 2 | மடித்தல் | |
| 3 | சுற்றுதல் | நாளொன்றுக்கு 98.00 |
| 4 | முறுக்கேற்றுதல் | |
| 5 | பாவு போடுதல் | நாளொன்றுக்கு 104.00 |
| 6 | மேஸ்திரி/எழுத்தர் | மாதமொன்றுக்கு 3,003.00 |
| 7 | நிருவாக உதவியாளர் | மாதமொன்றுக்கு 3,352.00 |

**விளக்கங்கள்:**

**1.** தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2000ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்.) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு, கூடுதலாக 20 காசுகள் (இருபது காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு அதாவது, ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

**3.** நாட்கூலியைக் கணக்கிட, மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

**4.** மாத ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

**5.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 112, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, நாள்: 22 செப்டம்பர் 2008.]*

1961ஆம் ஆண்டு மோட்டார் வண்டி போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1961) 38ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (iii) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகள் மற்றும் தமிழ்நாடு 1965ஆம் ஆண்டு மோட்டார் வண்டி போக்குவரத்து தொழிலாளர் விதிகள், மலைத்தோட்டத்தில் மோட்டார் வண்டிகளை இயக்குவதற்காக தொழிலாளர்களை பணியில் அமர்த்தியுள்ள தொழிலதிபர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் மூன்றாண்டு கால அளவுக்கு பொருந்தாது என உத்தரவிடுகிறார், அதாவது:—

**1.** மலைத்தோட்டத் தொழிலில் பணியமர்த்தப்பட்ட மோட்டார் வண்டி போக்குவரத்து இயக்குகின்ற தொழிலாளர்கள், 1951ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 69/1951)—ன்படி அனைத்து பயன்களையும் பெற்று வரவேண்டும்;

**2.** ஒரு வாரத்தில் 48 மணி நேரத்திற்கும் அதிகமாக வேலை செய்வதற்காக அவர்களுக்கு மிகை நேர ஊதியம் வழங்கப்பட வேண்டும்; மற்றும்

**3.** கால்களை ஓரளவு மறைக்கக்கூடிய ஒரு ஜோடி மிதியடிகள் ஆண்டுக்கொருமுறை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது